**நிந்தவூர் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) 2018 டிசம்பர் 31 இல் மோட்டார் கிரேடர் (Motor Grader) இயந்திரத்தின் மூலம் பெறவேண்டிய வாடகை ரூபா 96,620 தொகை நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்படவில்லை. | பெறவேண்டிய வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகவும் நடைமுறை சொத்தாகவும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | மோட்டார் கிரேடர் (Motor Grader) நிலுவை தொடர்பாக எது வித தகவலும் வழங்கப்படாததினால் இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. |
| (ii) சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் 2015 செப்டம்பர் 22 ஆம் திகதி முதல் 2018 செப்டம்பர் 12 வரை சுகாதார இராஜாங்க அமைச்சின் பிராந்திய அலுவலகத்திற்காக ரூபா 15,000 மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாக உள்ள 36 மாதங்களுக்கான வாடகை ரூபா 540,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | பெறவேண்டிய வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகவும் நடைமுறை சொத்தாகவும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும் | சபையின் கட்டிடத்திற்கான வாடகைத் தொகையினை வழங்குமாறு உரிய அமைச்சிற்கு அறிவித்தும் பதில் ஏதும் கிடைக்காமையே கணக்குகளில் கொண்டு வரப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) 2018 ஆம் ஆண்டில் அமீர் மேசா பொது நூலகத்திற்கென நன்கொடையாக பெற்றுக் கொண்ட புத்தகங்கள் 44 பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதி கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வருமதிகள் ரூபா 2,477,322 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் அல்லது உரிய முறையில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்நிலுவையானது கிராமோதய சபைகளின் காலத்திற்குரியதாகும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 42,842,560 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள், நூலகப் புத்தகப் பதிவேடுகள மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் தொடர்பாக முழுமையான விபரம் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை, நிலையான சொத்து தொடர்பான வகையும், அதன் பெறுமதி, ஒவ்வொன்றாக காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் x இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரவு செலவுத்திட்டத்துடன் வருமானத்தினை மீளாய்வு செய்யும் அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1,512,758 பெறுமதியான காலங்கடந்த 31 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக உரியவருக்கு அறிவித்து பெறாத பட்சத்தில் அதனை வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,043,938 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் வருமானங்களிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 396,368 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் ரூபா | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 8,848,000 | 4,464,300 | 2,984,750 | 4,817,677 | 6,250,000 | 4,424,540 | 3,377,020 | 3,338,127 |
| வாடகைகள் | 8,415,000 | 5,134,940 | 5,159,570 | 3,250,566 | 5,125,000 | 3,069,750 | 3,039,020 | 3,275,196 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,025,000 | 827,150 | 827,150 | -- | 1,525,000 | 648,700 | 648,700 | -- |
| ஏனைய வருமானம் | 13,025,000 | 12,784,869 | 12,618,037 | 3,344,790 | 8,500,000 | 7,604,681 | 7,277,198 | 3,177,958 |
| | 31,313,000 | 23,211,259 | 21,589,507 | 11,413,033 | 21,400,000 | 15,747,671 | 14,341,938 | 9,791,281 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 33,002,540 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 21,589,507 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 65% ஆக காணப்பட்டிருந்தது. | வருமான சேகரிப்பு வீதத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ஆதன வரி ரூபா 4,817,677 தொகை அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள ஆதன வரி ரூபா 4,817,677 தொகை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதனவரி நிலுவையினை காலப்பகுப்பாய்வுடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) 1980 முதல் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 3,173,466 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகையினை அறவிட அல்லது முறையாக பதிவழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நீண்டகாலமாக இறைச்சிக்கடை நிலுவையாக உள்ள மீதிகளை அடிப்படையாகக் கொண்ட உரிய நபர்களுக்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்ட போது குறிப்பிட்டவர்கள் மரணித்தும், பிழையான விலாசத்தினைக் கொண்டு இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு பெற்றிருக்கின்றனர். இதனால் இந்நிலுவையினை |

| | | |
|---|---|---|
| | | பதிவழிப்பதற்கு சபை நடவடிக்கை மேற் கொள்ளும். |
| (ii) 2018 ஆம் ஆண்டுக்கான நிலுவையான கடையறை வாடகை ரூபா 21,000 இன்று வரை அறவிடப்படாமல் உள்ளது. | நிலுவையான வாடகையினை அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கடையறை வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது |

2.2.5 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான முத்திரைத் தீர்வைகள் முறையே 10,786,740 மற்றும் ரூபா 9,528,100 தொகைகளை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கப்படவில்லை. மேலும் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையினை கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய தகவல்களைப் பெற்று குறித்த முத்திரை தீர்வை இனை அறவிட நடவடிக்கை எடுத்தல். | காணிப்பதிவாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் தகவல்களின் பிரதிகள் மற்றும் தொகைகளை அடிப்படையாக வைத்தே எமது சபைக்கான தொகையினை கோர முடியுமாக உள்ளது. |

2.2.6 அசைவற்ற ஆதன விற்பனை வருவாய்மீதான தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் விற்பனை செய்யப்படுகின்ற காணிகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154ஆம் பிரிவுக்கமைய 1,150 அசைவற்ற ஆதனங்களை விற்று வருவாய் பெறுமதி ரூபா 378,345,000 தொகையில் 01 சதவீதம் தீர்வையாக ரூபா 3,783,450 தொகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் வருமானம் பெறும் வழிகளினை உரியவாறு அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் | எமது பிரதேசத்திற்குற்பட்ட அதிகார எல்லையினுள் மேற்கொள்ளப்படும் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதியில் 01 சதவீதத்தினை அறவிடுகின்றோம், மாறாக அசைவற்ற ஆதனங்களின் விற்பனை, கொள்வனவு, தொடர்பாக, முத்திரை தீர்வையின் மூலமாக கிடைக்க வேண்டிய தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாகாண சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவுபிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 வரை 14 விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும். | ஏனைய விடயங்களுக்கும் உபவிதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட 06 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்ட உபவிதிகளுக்கு செயற்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றது. |

(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் குப்பைகளை பிரித்து எடுப்பதற்காக 5,000 குடும்பங்களுக்கென 10,000 பைகள் ரூபா 385,000 தொகைக்கு கொள்வனவு | சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை முறையாக மீள்சுழற்சிக்கு ஈடுபடுத்த | திண்மக் கழிவு தொடர்பாக குப்பைகளை தரம்பிரிப்பதற்கு நடவடிக்கை ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட போதும் காட்டு யானைகளின் பிரச்சினையில் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்ததில் இதுவரை 3,351 பைகள் வழங்கப்படாமல் உள்ளதுடன் சேர்க்கப்படும் குப்பைகள் பிரிக்கப்படாமலும் மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படாமலும் குவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலாக உள்ளது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிலைபேறுதகு அபிவிருத்தியின் இலக்குடன் எமது சபையின் நடவடிக்கையானது ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சபையில் முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்படுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 03 கணனிகளில் இதர தேவைகளுக்காக 02 கணனிகளும், 01 கணணி பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஏனைய சாதனங்களைப் பெற்று உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | மேலும் சாதனங்கள் தேவையாக இருப்பதனால் அதனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இச்சாதனங்களை ஏனைய தேவைக்கு பயன்படுத்துமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| (ஆ) அலுவலகக் கட்டிடம், பொதுநூல் நிலையம், பொதுச்சந்தை, பொது விளையாட்டு மைதானம், பூங்கா மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ)சபையில் பயன்படுத்தப்படும் 05 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். | உரிமை மாற்றத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஈ) முகாமைத்துவ குழு அறிக்கைப் புத்தகம் கணக்காய்வின் போது சபையினால் சமர்ப்பிக்கப்படாததுடன், 2018 சனவரி தொடக்கம் மார்ச் வரையிலான செலவுகளின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 10,552,014 முகாமைத்துவ குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ குழு அறிக்கைப் புத்தகம் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படுவதுடன் உரிய அங்கீகாரத்தினைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (உ) 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடித இல. 03/2017 இன் பிரகாரம், அலுவலர்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை உறுதிப்படுத்துவதற்கு விரலடையாளப் பதிவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டிய போதிலும், 2018 ஓகஸ்ட் 01ஆந் திகதியிலிருந்து 2019 மே 15 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிகைக்கமைய நடவடிக்கை எடுத்தல் | விரலடையாள இயந்திரம் மீளவும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஊ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 09/2009 இன் 04 வது பந்தியின் உப பரிவு IV இன் பிரகாரம், 2018ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுத் தொகையானது விரலடையாள பதிவு இயந்திர அறிக்கைகளைக் கொண்டு உறுதிப்படுத்தப்படாமல், உள்வருகை மற்றும் வெளிச்செல்கை வரவுப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு ரூபா.39,463 தொகை செலுத்தப்பட்டிருந்தது | விரலடையாள இயந்திரப் பிரதியினூடாகவே வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரவுத் தினப்பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகிறது இருப்பினும் எதிர்காலத்தில் விரலடையாள இயந்திரப் பிரதியினூடாகவே வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையின் 09 பதவிகளுக்கான ஆளணிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை அதன் அவசியத்திற்கமைய நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். | வெற்றிடத்திற்கு தேவையான ஆளணியினை வழங்குமாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் கோரப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையை விட்டு நீங்கிய 24 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா104,918 தொகை 11 வருடங்களுக்கு மேலதிகமாக அறவிடப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | அரச ஊழியர் கடன் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச ஊழியர் கடன் தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகார எல்லைக்குள் குடியிருக்கும் 14,563 குடியிருப்பாளர்கள் காணப்பட்டிருந்தும், 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 138(2) இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறவிடப்படுவதற்கான அறிவித்தல்கள் ("K" படிவம்) பிரதேச சபையினால் 487 குடியிருப்பாளர்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மேலும் "K" படிவமானது கடந்த 5 வருடங்களில் சபையின் மொத்தமான குடியிருப்பாளர்களில் 5 சதவீதமானவர்களிற்கே விநியோகிக்கப்பட்டிருந்தது. | சபையில் எல்லைக்குட்படப்பட குடியிருப்பாளர்களுக்கு K"படிவம் வழங்கப்பட்டு பூரணமாக ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் நியமிக்க நடவடிக்கை எடுத்தும் ஆளணியின்மையால் இதனை விநியோகிப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது மேலும் சகல K Form வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 184,416,846 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு பயன்பாட்டிலுள்ளது அவை தொடர்ச்சியாக பதிவு செய்யப்படவில்லை எதிர்காலத்தில் அதனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

3.6 பெறுகை

3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மீண்டு வரும் செலவினமாக வழங்கல்களும் சாதனமும் மற்றும் பழுதுபார்த்தல் | எதிர்வரும் வருடத்தில் சபையினால் | பெறுகைத்திட்டம் தொடர்பாக திட்டமிடலை மேற்கொள்வதில் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளுக்காக ரூபா 8 மில்லியனும் மூலதனச் செலவுகளாக ரூபா.18.5 மில்லியனும் செலவு செய்யப்பட்ட போதிலும், சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சபையினால் அடிக்கடி ஏற்படும் பெறுகை தொடர்பான தீர்மானம் அவசரம் என்ற காரணமாக பெறுகைத்திட்டம் தயாரிப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. இருப்பினும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பெறுகை கைந்நூல் பிரிவு 3.9.1 இன் நிபந்தனைகளுக்கமைய தெரிவு செய்யப்பட்ட சமூக மட்ட அமைப்பின் ஏற்கனவே வழங்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பூர்த்தியடையாத பகுதியின் கூட்டுமொத்த பெறுமதியும் பிரேரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் பெறுமதியும் ரூபா 02 மில்லியனை மீறக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தும் இதற்கு முரணாக 04 சமூக மட்ட அமைப்புக்களுக்கு வேலைத்திட்டங்கள் 02 மில்லியனை விஞ்சியதாக வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை கைந்நூல் நிபந்தனைகளுக்கமைய வேலைத்திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல். | அவசரமாக முடிக்க வேண்டிய தேவைகள் ஏற்படுவதனால் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்நியமனத்தினை கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்தப்படும். |
| (ஆ) அட்டப்பள்ளம் முஸ்லிம் மையவாடி நில நிரப்பு வேலை ரூபா 798,395 தொகையில் 2018 திசம்பர் 12 ஆந் திகதி செய்து முடிக்கப்பட்டிருந்தும் 2019 மே 22 ஆந் திகதி வரை கிறவல் மண் சரியாக கலைக்கப்படாமலும் ஒழுங்குபடுத்தப்படாமலும் காணப்பட்டிருந்தது. | மேற்படி வேலையில் கிறவல் மண் சரியாக கலைக்கப்படவும் ஒழுங்குபடுத்தப்படவும் நடவடிக்ககை எடுத்தல் | மையவாடியில் கிறவல் முழுமையாக பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது |
| (இ) நிந்தவூர் பிரிவு 06 இல் பொழுதுபோக்கு இட கட்டுமான வேலை ரூபா 1,193,805 தொகையில் 2018 திசம்பர் 20 ஆந் திகதி செய்து முடிக்கப்பட்டிருந்தும் இறங்கு படிகள் இரு ஓரங்களிலும் வெடித்துக்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக இடப்பட்டமண் நிலத்திற்குள் இறங்குண்டு அத்திவாரமும் வெடித்துக் காணப்பட்டிருந்தது. | மேற்படி வேலை சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) வருடாந்த செயலாற்றல் அறிக்கை<br>(ii) கடன்கொடுத்தோர் பட்டோலை<br>(iii) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு<br>(iv) கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு<br>(v) முற்கொடுப்பனவு பட்டோலை<br>(vi) நிலுவை வருமான காலப்பகுப்பாய்வு<br>(vii) களஞ்சிய இருப்பு பட்டோலை | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் இப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேணடும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை சபையின் JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறவேண்டிய ரூபா 530,820 வாடகைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வாடகைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |
| (ஆ) 2016 ஆம் ஆண்டு பிரதேச சபைகளை வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் சபையினால் சிறுவர் பூங்காவிற்கும் வாகனத் தரிப்பிடத்திற்கும் புற்தரைகளை இடுதல் வேலை பூர்த்திசெய்யப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு குறித்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இவ்வேலை தொடர்பாக தொழிலாளர் கூலியாக ரூபா18,900 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேலை செய்யப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் உரிய நபர்களிடமிருந்து கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுத்தல். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |